# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ்நாடு தொலைத் தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்
### தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்: 166 தேதி:- 06.09.2014

# அநீதி களைய ஆர்ப்பரிப்போம்...

வேலூர் மாவட்ட நிர்வாகம் 140 ஒப்பந்த ஊழியர்களை 01.08.2014 முதல் எதேச்சதிகாரமாக பணி நீக்கம் செய்துள்ளது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த 140 ஒப்பந்த ஊழியர்களும் BSNL நிறுவனத்தில் பணியாற்றி வருகின்றனர். இவர்களை பணி நீக்கம் செய்ய என்ன காரணம்?

இந்திய தொழிலாளர் சட்டத்தின் படி ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியத்துடன் பஞ்சப்படியும் வழங்க வேண்டும். வேலூர் நிர்வாகம் இந்த 140 ஊழியர்களுக்கும் பஞ்சப்படி வழங்கவில்லை. இதை நமது மாவட்ட சங்கம் தட்டிக் கேட்டது. மாவட்ட நிர்வாகத்திற்கு கோபம் வந்தது. விளைவு? 140 ஒப்பந்த ஊழியர்களையும் பணி நீக்கம் செய்து கொஞ்சமும் கலங்காமல் மனிதாபிமானமற்று வேலூர் பொது மேலாளர் 01.08.2014 அன்று உத்தரவிட்டுள்ளார். பஞ்சப்படி கேட்டதற்காக பஞ்சமா பாதக செயலை புரிந்தது போல் தண்டனை வழங்கியுள்ளது வேலூர் மாவட்ட நிர்வாகம்.

இந்த 140 ஊழியர்களின் உழைப்பை 10 வருடங்களுக்கும் மேலாக உறிஞ்சிவிட்டு சக்கையாக தூக்கி எரிகிறது வேலூர் மாவட்ட நிர்வாகம். இவர்கள் சக்கைகள் அல்ல. மாறாக BSNL நிறுவனத்தை பாதுக்காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள உழைப்பாளி வர்க்கத்தை சார்ந்தவர்கள். இவர்களை பாதுகாப்பது நமது தலையாய கடமையாகும்.

வேலூர் மாவட்டத்தில் ஒப்பந்த ஊழியர் பணி நீக்கம் என்ற செய்தி கிடைத்தவுடன் 01.08.2014 முதல் 7 நாட்கள் தொடர் உண்ணாவிரதம் எழுச்சியுடன் நடைபெற்றது. பாதிக்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுடன் வேலூர் மாவட்ட BSNL ஊழியர் சங்க தோழர்களும் உண்ணாவிரதத்தில் பங்கேற்று போராட்டத்தை தலைமையேற்று நடத்தினர். தமிழ் மாநிலச் செயலர் தோழர் S.செல்லப்பா உட்பட மாநில சங்க நிர்வாகிகள் தோழர்கள் முருகையா, பாபுராதாகிருஷ்ணன், நாராயணசாமி, பழனிச்சாமி, சீனிவாசன், மகேந்திரன் மற்றும் சென்னை CGM அலுவலக மாவட்ட செயலர் தோழர் K.V.சிவக்குமரன் ஆகியோர் வேலூர் உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொண்டனர். TNTCWU மாநிலச் செயலர் தோழர் C.வினோத்குமார் 7 நாட்களும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டது ஊழியர்களுக்கு உற்சாகத்தை கொடுத்தது.

தமிழ் மாநில சங்கத்தின் சார்பாக 05.08.2014 அன்று அனைத்து கிளைகளிலும் கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. வேலூர் பொது மேலாளரிடம் மாநிலச் செயலர் சந்தித்து பிரச்சனையை சுமூகமாக முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்தினார். ஆனால் வேலூர் பொது மேலாளர் அதை ஏற்கவில்லை.

தலைமை பொது மேலாளரிடம் இப்பிரச்சனை சம்பந்தமாக மூன்று முறை கடிதம் கொடுத்து விவாதிக்கப்பட்டது. மாநில நிர்வாகமோ ஒப்பந்த ஊழியர் பிரச்சனையை BSNL ஊழியர் சங்கம் எடுக்கக்கூடாது என்று வியாக்கியானம் செய்தது. அகில இந்திய அளவில் தேசிய

கவுன்சில் உட்பட ஒப்பந்த ஊழியர் பிரச்சனை விவாதிக்கப்படுகிறது. மாநில அளவிலும் கடந்த 15 ஆண்டுகளாக ஒப்பந்த ஊழியர் பிரச்சனைகளை மாநிலக் கவுன்சில் கூட்டங்கள் உட்பட விவாதித்து வருகிறோம். சுரண்டப்படும் ஒப்பந்த ஊழியர்கள் பிரச்சனைகளை BSNL ஊழியர் சங்கம் உறுதியாக எடுக்கும் என தலைமைப் பொது மேலாளரிடம் நேரிலும் எழுத்திலும் தெரிவித்துவிட்டோம்.

வேலூர் பிரச்சனையில் இன்று வரை பெரிய முன்னேற்றம் இல்லை. வேலூர் மாவட்ட நிர்வாகம் 35 ஊழியர்களை தான் மீண்டும் பணியில் எடுப்போம் என்று பிடிவாதமாக புதிய டெண்டர் கோரியுள்ளது. இந்நிலையை நாம் அனுமதிக்க முடியாது. பழிவாங்கும் நோக்கத்தோடு மாவட்ட நிர்வாகம் செயல்படுகிறது. அதற்கு மாநில நிர்வாகத்தின் ஆசியும் உள்ளது.

எனவே நிர்வாகத்தின் போக்கில் மாற்றம் வேண்டும் என்று வலியுறுத்தியும், பாதிக்கப்பட்ட 140 ஒப்பந்த ஊழியர்களுக்கு நியாயம் வழங்க வேண்டியும் வலியுறுத்தி தமிழ் மாநிலச் சங்கம் போராட முடிவெடுத்துள்ளது. அதன் அடிப்படையில் கீழ்கண்ட போராட்டத்தை எழுச்சியுடன் நடத்துவோம்.

## 15.09.2014 **முதல் காலவரையற்ற உண்ணாவிரதம்**

முன்னிலை:

**தோழர் S.செல்லப்பா, மாநிலச் செயலர், BSNLEU**

பங்கேற்போர்

**தோழர் A.பாபுராதாகிருஷ்ணன், மாநில உதவி செயலர், BSNLEU**

**தோழர் M.முருகையா, மாநில தலைவர், TNTCWU**

**தோழர் C.வினோத்குமார், மாநிலச் செயலர், TNTCWU**

## 16.09.2014 **அன்று தமிழகத்தில் ஒப்பந்த ஊழியர்**

## **ஒரு நாள் வேலை நிறுத்தம்**

## **அன்றே சென்னை CGM அலுவலகம் முன்பு அனைவரும் பங்கேற்கும்**

## ***பெருந்திரள் உண்ணாவிரதம்***

**பெருந்திரள் உண்ணாவிரதத்தில் அலைகடலென பங்கேற்பீர்...**

**நிர்வாகத்தின் அடக்குமுறையை எதிர்த்து உறுதியுடன் போராடுவோம்...**

**கொத்தளங்கள் நடுங்கட்டும்..**

**கோட்டைகள் நொருங்கட்டும்...**

தோழமையுள்ள,

-Sd-

C.வினோத்குமார்
மாநிலச்செயலாளர்.

(S.செல்லப்பா)
மாநிலச்செயலாளர்.